## மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பரங்கிப்பேட்டை.

## அசல் வழக்கு எண். 16/2009

The Oaths Act 1969 (Act.44/1969)-ன் விதிமுறைகளின் படி 29-04-2026-ஆம் நாளாகிய இன்று மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திரு.த.யுவராஜ் அவர்களால் சாட்சியிடம் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை செய்யப்பட்டார்.

| | | | |
|---|---|---|---|
| தேதி | 29-04-2026 | சாட்சி | பி.சா.1 |
| பெயர் | திரு.மகாவிஷ்னு | வயது. | 39 |
| தந்தை பெயர் | திரு. ராமச்சந்திரன் | | |

**வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி -**

6) இவ்வழக்கில் வாதிகள் தரப்பில் என்னென்ன ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பது தெரியுமா என்றால் Agreement ஆவணத்தை தாக்கல் செய்துள்ளார்கள். வேறு ஆவணகள் இல்லை. அந்த Agreement ஆவணத்தை படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்த்தேன். அந்த Agreement ஆவணத்தின் முத்திரைத்தாள் எங்கு யார் பெயரில் எப்போது எவ்வளவு மதிப்புக்கு வாங்கப்பட்டது என்று தெரியுமா என்றால் Agreement போடுவதற்கு முந்தைய நாள் கலியமூர்த்தியின் பெயரில் ரூ.20 மதிப்புக் கொண்ட முத்திரைத்தாளை புவனகிரியில் வாங்கியுள்ளார்கள். புவனகிரியில் எந்த Stamp Vendor இடம் வாங்கப்பட்டது என்று எனக்கு தெரியாது. எனது வழக்கறிஞர் அந்த Agreement ஆவணத்தை படித்து காண்பித்தார். அதன்பிறகுதான் புவனகிரியில் அந்த முத்திரைத்தாள் வாங்கப்பட்டது எனக்கு தெரியும் என்றால் சரியல்ல, அதற்கு முன்பே தெரியும். முத்திரைத்தாள் விற்றவரிடம் சென்று கலியமூர்த்தி Stamp Paper வாங்கியது சம்மந்தமாக விசாரித்தேனா என்றால் இல்லை.

7) 02-07-2008-ஆம் தேதி கிரயம் பெறுவதற்குமுன்பு எத்தனை வருடங்களாக குப்புசாமிக்கு புற்றுநோய் மற்றும் கோமாவில் இருந்தார் என்றால் கிரயத்திற்கான முன்பணத்தை கொடுக்கும்போது குப்புசாமி நல்ல நிலையில் இருந்தார், அதன்பிறகு மருத்துவ சிகிச்சைக்காக சென்னை சென்று 45 நாட்களில் கோமா நிலைக்கு சென்று மருத்துவமனையில் முடியாது என்று சொல்லிவிட்டதால் அவரை வீட்டிற்கு அழைத்துவந்துவிட்டனர். அதனால் குப்புசாமிக்கு 02-07-2008-ஆம் தேதியில் ஒன்றரை மாதத்திற்குமுன்பே முன்பணம் ரூ.1 லட்சத்தை கொடுத்துவிட்டேன். ரூ.1 லட்சம் முன்பணம் கொடுத்ததற்கு குப்புசாமி ரசீது ஏதேனும் கொடுத்தாரா என்றால் இல்லை. ரூ.1 லட்சம் முன்பணம் கொடுத்தது சம்மந்தமான விவரத்தை எதிர்வழக்குரையில் கூறியுள்ளேனா என்றால் அதுகுறித்து தெரியவில்லை.வா.சா.ஆ.1 உடன்படிக்கை ஆவணம் எழுதப்பட்டது குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றால்

சரிதான். ரூ.1 லட்சம் முன்பணம் கொடுப்பதற்கு முன்பு குப்புசாமிக்கு எத்தனை வருடங்களாக புற்றுநோய் இருந்தது என்றால் அதுகுறித்து எனக்கு தெரியாது. 02-07-2008-ல் கிரயம் பெற்றபோது குப்புசாமி கோமாவில் இருந்ததால்தான் குப்புசாமியிடம் கிரயம் பெறாமல் அவரது வாரிசுதாரர்களிடமிருந்து கிரயம் பெறப்பட்டது என்றால் சரிதான். இவ்வழக்கில் குப்புசாமி எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளார் என்றால் குப்புசாமி இறந்துவிட்டதால் அவருடைய வாரிசான சக்திவேல் எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளார். குப்புசாமி 20-12-2009-ல் இறந்துவிட்டார் என்றால் சரிதான்.

8) இந்நீதிமன்றத்தில் நடந்த அ.வ.எண்.32/2008 என்ற வழக்கில் குப்புசாமி எதிர்வழக்குரை தாக்கல் செய்தாரா என்றால் அதுகுறித்து எனக்கு தெரியாது. மேற்படி வழக்கில் சொத்தை விற்ககூடாது என்று கலியமூர்த்தி குப்புசாமிக்கு எதிராக இடைக்கால தடைஉத்தரவு பெற்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. இந்த வழக்கிலும், அ.வ.எண்.32/2008 என்ற வழக்கிலும் குப்புசாமிக்கு ஆதரவாக வழக்கறிஞர் ஜெயச்சந்திரன் ஆஜரானார் என்றால் அதுகுறித்து எனக்கு தெரியாது. வழக்கறிஞர் ஜெயச்சந்திரன்தான் 02-07-2008(பி.சா.ஆ.1) தேதி பெற்ற கிரய பத்திரத்தினை வரைவு செய்து கொடுத்தார் என்றால் சரிதான். குப்புசாமியின் வாரிசுதாரர்கள் அ.வ.எண்.32/2008 என்ற வழக்கு நிலுவையில் இருந்த விவரத்தை கிரயத்தின்போது தெரிவித்தார்களா என்றால் இல்லை. கிரயத்திற்குபிறகு எனக்கும் எனது தாயாருக்கும் கிரய ஆவணத்தை அனுசரித்து எங்கள் பெயரில் 2014-ல் பட்டா பெயர் மாற்றம் செய்துகொடுக்கப்பட்டது. அவ்வாறு பட்டா பெயர் மாற்றம் செய்யும்போது இந்த வழக்கு நிலுவையில் உள்ள விவரத்தை தாசில்தாரிடம் தெரிவித்தோமா என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியவில்லை. பட்டா பெயர் மாற்றம் செய்யும்போது கலியமூர்த்தி மற்றும் அவரது வாரிசுதாரர்களுக்கு அறிவிப்பு கொடுக்கப்பட்டு ஆட்சேபணை கேட்கப்பட்டதா என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது.

9) நிலுவையில் இருந்த இந்த வழக்கினை மறைத்தும் கலியமூர்த்தி மற்றும் அவரது வாரிசுதாரர்களுக்கு அறிவிப்பு கொடுக்காமலும் அவர்களது ஆட்சேபணைகளை கேட்காமலும் பொய்யாக பட்டா பெயர் மாற்றம் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. கிரயத்திற்கு ஒன்றரை மாதத்திற்கு முன்பிலிருந்து கோமாவில் இருந்த குப்புசாமி கோமாவிலேயே இறந்துவிட்டார் என்றால் சரிதான். அ.வ.எண்.32/2008 என்ற வழக்கில் என்ன பரிகாரம் கோரப்பட்டது என்ற விவரமும் அந்த வழக்கில் என்ன முடிவானது என்ற விவரமும் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அ.வ.எண்.32/2008 என்ற வழக்கு சம்மந்தமான விவரங்களை எனது எதிர்வழக்குரையிலோ,முதன்மை விசாரணை சாட்சியத்திலோ சொல்லவில்லை என்றால் சரிதான். நான் சொல்வதுபோல் குப்புசாமிக்கு புற்றுநோயோ, கோமா நிலையோ ஏற்படவில்லை என்றால் சரியல்ல. கிரயத்திற்கு ஒன்றரை மாதத்திற்குமுன்பு குப்புசாமியிடம் ரூ.1 லட்சம் முன்பணம் கொடுத்ததாக இந்த வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. குப்புசாமி 03-12-2007-ல் வா.சா.ஆ.1 உடன்படிக்கை ஆவணத்தை எழுதி ரூ.25 ஆயிரத்தை முன்பணமாக பெற்றுக்கொண்டதால் அவர் எங்களுக்கு வழக்கு சொத்தை கிரயம் கொடுக்க ஒப்புக்கொள்ளவில்லை என்றாலும் அதன் காரணமாகத்தான் குப்புசாமி உயிருடன் இருந்தபோதே அவருக்கு புற்றுநோய் மற்றும் கோமா என்று பொய்யாக சொல்லி

குப்புசாமியின் வாரிசுதாரர்களிடமிருந்து பொய்யாக கிரயம் பெற்றோம் என்றாலும் சரியல்ல.

10) குப்புசாமிக்கு எவ்விதமான உடல்நல பிரச்சனையும் இன்றி நல்ல நிலையில் இருக்கும்போதுதான் 20-12-2009-ல் இறந்துபோனார் என்றால் சரியல்ல.குப்புசாமியிடம் ரூ.1 லட்சம் முன்பணத்தை கொடுக்கும்போது யார் யார் இருந்தார்கள் என்றால் குப்புசாமி மற்றும் அவரது குடும்பாத்தாரிடம் ரூ.1 லட்சம் முன்பணத்தை கொடுக்கும்போது எனது தெருவை சேர்ந்த ராதாகிருஷ்ணன் த.பெ கோவிந்தசாமி, குப்புசாமி வசிக்கும் தெருவை சேர்ந்த ராமலிங்கம் த.பெ கலியபெருமாள் ஆகியோர் உடனிருந்து வாங்கிதந்தனர். மேற்படி விவரங்களை எனது எதிர்வழக்குரையிலோ, முதன்மை விசாரணை சாட்சியத்திலோ சொல்லியுள்ளேனா என்றால் இல்லை, தற்போது கேட்டதால் அதனை சொல்கிறேன். அ.வ.எண்.32/2008 என்ற வழக்கு வாபஸ் பெறப்பட்ட விவரம் தெரியுமா என்றால் தெரியாது.

11) வா.சா.ஆ.1 கிரய உடன்படிக்கையில் யார் யார் சாட்சி கையொப்பம் போட்டுள்ளார்கள் என்றால் சிதம்பரம் மீதிக்குடி பகுதியை சார்ந்த சின்னப்பா மற்றும் மகேந்திரமூர்த்தி ஆகியோர் சாட்சி கையொப்பம் போட்டுள்ளார்கள். சின்னப்பா உயிருடன் இருக்கிறாரா என்று எனக்கு தெரியாது. மகேந்திரமூர்த்திக்கு மீதிக்குடி பகுதியில் நிறைய நிலபுலன்கள் உள்ளது என்றால் அதுகுறித்து எனக்கு தெரியாது. மகேந்திரமூர்த்திக்கும் எனக்கும் ஏதேனும் விரோதம் உண்டா என்றால் எங்களுக்கு இடையே எந்த சம்மந்தமும் இல்லை. குப்புசாமி குடும்பத்தினருக்கு எவ்வளவு நிலபுலன்கள் உள்ளது என்றால் அதுகுறித்து எனக்கு தெரியாது. கலியமூர்த்தி சிதம்பரம் நகராட்சிக்கு சொந்தமான இடத்தில் பேருந்து நிலையம் அருகே கடை நடத்தி வந்தார் என்றால் சரிதான். நானும் எனது தாயாரும் பெற்ற கிரய ஆவணங்களில் குப்புசாமியின் நோய் மற்றும் மருத்துவ செலவு குறித்தும், அவரது மகள் திருமண செலவு குறித்தும் ஏதேனும் சொல்லப்பட்டுள்ளதா என்றால் எனக்கு ஞாபகமில்லை. 03-12-2007 எழுதப்பட்ட கிரய உடன்படிக்கையை எங்களது கிரய ஆவணங்கள் கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. கிரய உடன்படிக்கை விவரம்பற்றி தெரிந்துக்கொண்டே பொய்யான காரணங்களை கொண்டு கிரய ஆவணங்களை ஏற்படுத்திக்கொண்டோம் என்றால் சரியல்ல. எங்களது கிரய ஆவணங்கள் அமலுக்கும் அனுஷ்டானத்திற்கும் வரவில்லை என்றாலும் வழக்கு சொத்தின் சுவாதீனம் எங்களிடம் இல்லையென்றாலும் சரியல்ல.

12)நான் சிங்கப்பூருக்கு எந்த தேதியில் சென்றேன் என்றால் 08-08-2008-ஆம் தேதி சென்று 2010-ஆம் ஆண்டு திரும்பி வந்தேன். நான் திரும்பி வரும்போது குப்புசாமி உயிருடன் இருந்தாரா என்றால் இல்லை இறந்துவிட்டார். நான் சிங்கப்பூருக்கு சென்று வந்ததற்கான பதிவுகள் கொண்ட கடவுச்சீட்டை வைத்திருக்கிறேனா என்றால் வைத்திருக்கிறேன். அதனை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக இருக்கிறேன். போலியான கிரய பத்திரங்களை வைத்து பி.சா.ஆ.4 மற்றும் 5 ஆவணங்களை பொய்யாக தயாரித்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பி.சா.ஆ.4 அடமான பத்திரத்தில் எனது அப்பாவும், அம்மாவும் கையொப்பம் போட்டுள்ளனர் என்றால் சரிதான். நான் வெளிநாடு செல்லவேண்டி இருந்ததால் சொத்தினை அடமானம்

வைக்கும்பொருட்டு எனது தந்தைக்கு அதிகார பகராவணம் ஏதேனும் எழுதிக்கொடுத்தேனா என்றால் இல்லை. நானும் எனது தாயாரும் Bonafide Purchasers இல்லை என்றாலும் நாங்கள் ஏற்படுத்திக்கொண்ட கிரய ஆவணங்கள் பிரதிபலன்கள் (Consideration) அற்றது என்றாலும் சரியல்ல.

13) குப்புசாமி மின்சார வாரியத்தில் பணிபுரிந்து எப்போது பணி ஓய்வு பெற்றார் என்றால் 2002-ஆம் ஆண்டு. குப்புசாமி அவரது பணிக்காலத்தில் மீதிக்குடி கிராமத்தில் பணியாற்றியுள்ளாரா என்றால் அதுகுறித்து எனக்கு தெரியாது. பொதுவாக மின்சார வாரியத்தில் பணிபுரிந்தால் வெவ்வேறு ஊர்களுக்கு பணிமாறுதல் செய்யப்படுவார்கள் என்றால் சரிதான். நாங்கள் பெற்ற கிரயத்தின் அடிப்படையில் 05-02-2009-ஆம் தேதி நானும் எனது தாயாரும் வழக்கு சொத்தில் அத்துமீறி பிரவேசிக்க முயற்ச்சித்தோம் என்றால் சரியல்ல, வழக்கு சொத்தை நாங்கள்தான் அனுபவித்து வருகிறோம். குப்புசாமி கிரய உடன்படிக்கை எழுதிக்கொடுத்த விவரத்தினை நன்கு தெரிந்துக்கொண்டே பொய்யாக கட்சி செய்கிறேன் என்றால் சரியல்ல. நாங்கள் கிரயம் வாங்கிய காலத்தில் குப்புசாமி நல்ல உடல்நலனுடன் இருந்தார் என்றாலும் நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளார் என்றாலும் சரியல்ல. நான் பொய்யாக கட்சி செய்கிறேன் என்றால் சரியல்ல.

Typed to my dictation in open court read over to the witness and acknowledged by him/her to be correct.

(S/D.Thiru.D.Yuvaraj)
District Munsif cum Judicial Magistrate,
Portonovo.